ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

# மேற்கத்திய செவ்விசையின் தோற்றமும் வளர்ச்சியும்

**ஜெயப்பிரகாஷ்**

55

ஆய்வு நோக்கம்

உலக நாடுகளில் பிரபலமான மேற்கத்திய செவ்விசையின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் ஆய்வு செய்து அவை எத்துணை இசை வரலாற்றில் முக்கிய இடத்தை பிடித்துள்ளது என்று வரலாறு மற்றும் தொல்லியல் ஆய்வு நோக்கில் விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆய்வுச்சுருக்கம்

மேற்கத்திய செவ்விசையின் தோற்றமும் வளர்ச்சியும் என்பது மேற்கத்திய செவ்விசையானது எந்தெந்த நாடுகளில் முதலில் தோன்றி மக்கள் பயன்படுத்தும் செவ்விசை உருவாக மாறி வளர்ச்சியடைந்துள்ளது என்பதை வரலாற்று நோக்கில் அறிய இயலும். மேற்கத்திய செவ்விசை என்பது முதலில் ஐரோப்பியா நாடுகள் மற்றும் மேற்கத்திய ஆசியா நாடுகளில் பயன்படுத்தப்பட:டு வந்த இசையென வரலாற்று ஆய்வுகள், பைபிள் மற்றும் இசை வரலாற்று நூல்களும் விளக்குகின்றன. இவ்விசை கிறிஸ்தவ மதம் தோன்றுவதற்கு முன்பாக வேறு மதவழிபாட்டிற்குப் (சீயுஸ், ஏரிஸ், ஹிராக்கிள்ஸ், ஈட்ருஸ்க்கேன், செல்டிக், நோர்ஸ் மற்றும் ஜீடாய்சம்) பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதை வரலாற்று ஆய்வு நூல்கள் வாயிலாகவும், பைபிளின் பழைய ஏற்பாட்டு அதிகாரங்கள் வாயிலாகவும் அறிய இயலும் (யாத்திரியாகமம் - 15ஆம் அதிகாரம், சங்கீதம் - 150 அதிகாரம், உன்னதப்பாட்டு - 8 அதிகாரம்) இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கு பின்னர் இயேசுவை போற்றிப் பாட, வேறு மத வழிபாட்டிற்கு பயன்படுத்தப்பட்ட பாடல்கள் இயேசுவின் மீது பாடப்பட்டன. மேலும் இயேசு கிறிஸ்துவைப்பற்றி புதுப்புது செவ்விசைப் பாடல்களும் இயற்றப்பட்டன.

திறவுச்சொற்கள் :- மேற்கத்திய இசை, ஆசியா, செவ்விசை

இவ்வாய்வு கட்டுரையானது மேற்கத்திய செவ்விசை எந்தெந்த நாடுகளில் முதலில் தோன்றியது என்பதை தொல்லியல் மற்றும் வரலாற்று நோக்கில் விளக்குகிறது.

இவ்வாய் கட்டுரையானது மேற்கத்திய செவ்விசை எவ்வாறு படிப்படியாக பரிணாம வளர்ச்சியடைந்துள்ளது என்பதை தொல்லியல் மற்றும் வரலாற்று நோக்கில் விளக்குகிறது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

தலைப்பு அறிமுகம்

மனிதன் இயற்கையின் ஓசைகளையும், பறவைகளின் ஒலிகளையும் கேட்டவுடன் ஒலிகளை ஆராயத் துவங்கிவிட்டான். தன்னுடைய குரலில் இசைப்பாடல்கள் பாட முயற்சித்து குரல் மற்றும் இயற்கையின் ஒலிகள் மூலம் ஸ்வரக் கூறுகளைக் கண்டறியவும் முனைந்துள்ளான். இயற்கையாக உருவாகும் மூங்கில், விலங்குகளின் எலும்பு மற்றும் தோல்களில் இசைக்கருவிகளை உருவாக்கி இசைத்துள்ளான்.

மேற்கத்திய செவ்விசை என்பது முதலில் ஐரோப்பியா நாடுகள் மற்றும் மேற்கத்திய ஆசியா நாடுகளில் பயன்படுத்தப்பட:டு வந்த இசையென வரலாற்று ஆய்வுகள், பைபிள் மற்றும் இசை வரலாற்று நூல்களும் விளக்குகின்றன. இவ்விசை கிறிஸ்தவ மதம் தோன்றுவதற்கு முன்பாக வேறு மதவழிபாட்டிற்குப் (சீயுஸ், ஏரிஸ், ஹிராக்கிள்ஸ், ஈட்ருஸ்க்கேன், செல்டிக், நோர்ஸ் மற்றும் ஜீடாய்சம்) பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதை வரலாற்று ஆய்வு நூல்கள் வாயிலாகவும், பைபிளின் பழைய ஏற்பாட்டு அதிகாரங்கள் வாயிலாகவும் அறிய இயலும் (யாத்திரியாகமம் - 15ஆம் அதிகாரம், சங்கீதம் - 150 அதிகாரம், உன்னதப்பாட்டு - 8 அதிகாரம்)

இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கு பின்னர் இயேசுவை போற்றிப் பாட, வேறு மத வழிபாட்டிற்கு பயன்படுத்தப்பட்ட பாடல்கள் இயேசுவின் மீது பாடப்பட்டன. மேலும் இயேசு கிறிஸ்துவைப்பற்றி புதுப்புது செவ்விசைப் பாடல்களும் இயற்றப்பட்டன. இதனை ரோமப் பேரரசு சட்டமாக்கியது. பின்னர் கிறிஸ்தவ மார்க்கத்திற்கென போப்பும் ரோம பேரரசால் நியமிக்கப்பட்டனர். இதனை ரோமப் பேரரசர் கான்ஸ்டன்டயின் ஐ (ஊச 272 - ஊச 337) சட்டமாக்கினார். இவ்வாறு கத்தோலிக்க திருச்சபை கட்டமைக்கப்பட்டன.

செவி வழியாக பாடப்பெற்ற மேற்கத்திய செவ்விசைப் பாடல்களை பாடி மக்கள் துதி ஆராதனை செய்தனர். போப்பாக நியமிக்கப்பட்ட பலர் புதிய துதி பாடல்களை இயற்றினர். ரோமப் பேரரசர் சார்லிமேக்னே (யுனு 747 - யுனு 814) அவர்கள் மேற்கத்திய இசை வளர்ச்சிக்கும், ஆலய இசைக்கம் பெரும் பங்காற்றியுள்ளார். பைபிளின் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு அதிகாரங்களை மையமாக கொண்டு ஐரோப்பியா, மேற்கத்திய ஆசிய நாடுகளின் கிறிஸ்தவ ஆலயங்களின் இறை வழிபாட்டிற்கு கேண்டிக்கிள் மற்றும் கிரிகோரியன் சேன்ட் போன்ற பாடல் தொகுப்புகள் இசை வல்லுநர்களை கொண்டு லத்தீன் மொழியில் இயற்றப்பட்டன. இதில் போப் கிரிகோரியன் முக்கிய பங்காற்றியுள்ளார்.

மேற்கத்திய செவ்விசையின் தோற்றம் :

பழங்காலத்தில் மேற்கத்திய இசை எவ்வாறாக பயன்;;;;;;;;;;;;;;;படுத்தப்பட்டன என்பதை கற்காலத்தில் மக்களால் பயன்படுத்தப்பட்ட விலங்குகளின் எலும்பினால் செய்யப்பட்ட குழல்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கருவி, ராட்சத யானைகளின் தந்தங்களினால் ஆன ஊதுகருவிகள் போன்றவை ஐரோப்பிய பகுதிகளில் தொல்லியல் துறையால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தொல்லியல் துறையால் கண்டெடுக்கப்பட்ட விலங்குகளின் எலும்பினாலான குழல் கருவி 40,000 ஆண்டிலிருந்து 42,000 ஆண்டுகளுக்கு முந்தையது. இவ் குழல் இசைக்கருவி தற்பொழுதும் மியூசியத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. பாலியோ லித்திக் குகை ஓவியங்களில் இசைக்கருவிகள் இசைப்பதை காண முடிகிறது. மேலும் கற்கால குகை ஓவியங்கள், மண்ணாலான குழல் கருவிகள், ரேட்டில்ஸ் மற்றும் தாள கருவிகள் தொல்லியல் துறையால் கண்டெடுக்;கப்பட்டுள்ளன. 6000 ஆண்டு பழமையான டர்கிஸ் சுவர் ஓவியங்களில் தாளக்கருவிகளை இசைத்து நடனமாடுவதை காண முடிகிறது. மேலும் 4000 ஆண்டு பழமையான பித்தளை காலத்தில் உலோகங்களிலான இசைக்கருவிகள் (பெல்ஸ்,ஜிங்கில்ஸ்,ரேட்டில்ஸ், ஹாண்ட்) போன்றவற்றை தொல்லியல் துறை கண்டெடுதுள்ளது. மேலும் நரம்புக்கருவிகளை (லயர்) இசைப்பது போன்ற கல் ஓவியங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மேற்கத்திய செவ்விசையின் தோற்றத்தினை தொல்லியல் துறையின் அரிய கண்டுபிடிப்புகளின் வாயிலாக அறிய
முடிகிறது.

பண்டைய ஐரோப்பியா மற்றும் மேற்கத்திய ஆசிய நாடுகளில் மேற்கத்திய செவ்விசையின் வளர்ச்சி

பண்டைய மெசபடோமியாவின் இசை :

மெசபடோமியா - டைகிரிஸ் மற்றும் யூப்ரடிஸ் நதிகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதிகள் கி.மு 4000 ஆண்டுகள் பழமையான நாகரீகம் இது. இக்கால கட்டத்தில் தான் சுமேரியர் எழுத்து முறையை கண்டறிந்தனர். களிமண் தட்டுகளில் ஆப்பு வடிவ எழுத்துக்களை அறிமுகப்படுத்தினர். இம்முறையை அக்கேடியன்ஸ்களும் (சர்கோன்) மற்றும் பாபிலோனியர்களும் பயன்படுத்திக் கொண்டனர். பல களிமண் தட்டுகளில் இசைபற்றிய குறிப்புகள் உள்ளன. தொல்லியல் துறையால் சுமேரியர்களின் நகரத்தில் கி.மு.2500 வருட பழமையான லையர், ஹார்ப், எருமை லையர், லூட்ஸ், பைப்ஸ், தாளக்கருவிகள், சிம்பல்ஸ், கிளாப்பர்ஸ், ரேட்டில்ஸ், மணிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மெசபடோமிகள் இசை கலாச்சாரத்தில் இன்று நாம் காண்கின்ற சில

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இசை வடிவங்கள் இருந்ததை ஆய்வுகள் கூறுகின்றன. கி.மு.2500 காலகட்டத்தில் இசைக்கருவிகளை டியூன் செய்யும் முறைகள் இருந்ததை அறிய முடிகிறது. கி.மு.2300 காலகட்டத்தில் என்கிடுவானா என்ற இசையமைப்பாளர் இருந்ததை ஆய்வுகள்; கூறுகின்றனர். கி.மு.1800 காலகட்டங்களில் பாபிலோனியர்கள் இசை பற்றிய குறிப்புகள் எழுத துவங்கி விட்டனர். குறிப்பாக இன்டெர்வெல், இம்புறோவ்சேசன், நுணுக்கங்கள், இசையின் வகைகள், 7 ஸ்வர டயடோனிக் ஸ்கேன் ஆகியவற்றை கண்டறிந்து விட்டனர். இசை குறியீடுகள் எழுதப்பட்ட பதிவுகளாக பயன்படுத்தப்பட்டன.

இது போன்ற பழமை வாய்ந்த நாகரீங்களாக இந்தியா, சீனா மற்றும் எகிப்திய நாகரீகங்கள் வளர்ச்சியடைந்துள்ளன. மேலும் இஸ்ரவேல் மற்றும் பாலஸ்தீன நாகரீகங்களும் வளர்ச்சியடைந்துள்ளதை பைபிள் மற்றும் தொல்லியல் ஆய்வுகள் வாயிலாக நமக்கு கிடைக்கின்றன.

பண்டைய கிரேக்கத்தின் இசை

கிரேக்க தீபகற்பம், ஏகியன் தீவுகள், மேற்கு ஆசியாவின் சில நாடுகள், இதன் இத்தாலி, சிசிலி, மிடிடெறானியன் கடல் மற்றும் கருங்கடலை ஒட்டிய நாடுகள் பண்டைய கிரேக்க நாடுகளாகும். தொல்லியல் துறையால் கண்டெடுக்கப்பட்ட களிமண் தகடுகள், ஆலோஸ் எனப்படும் இரட்டைக் குழல் நாணல் இசைக்கருவி, ஏழு தந்திகளுடைய லையர் இசைக்கருவி, கிதாரா எனப்படும் நீளமான லையர் இசைக்கருவி ஆகியவற்றின் மூலம் எத்தனை நூற்றாண்டுகளுக்கு முன்னர் பண்டைய கிரேக்க மக்கள் இசை பற்றிய அறிவை பெற்றுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

கிரேக்க தத்துவ ஞானிகளான சாக்ரடீஸ், பிளாட்டோ, அரிஸ்டாட்டில் தங்களுடைய நூல்களான ரிபப்ளிக் டிமாயஸ், பொலிடிக்ஸ் போன்றவற்றில் இசை பற்றிய தகவல்களை கூறியுள்ளனர். மேலும் இசைக் கோட்பாடுகள் பற்றி பிதாகொரஸ் மற்றும் அரிஸ்டிடஸ் குயின்டில்யானஸ் போன்றோர் முறையான தகவல்களை கூறியுள்ளனர். மேலும் அரிஸ்டாட்டிலின் மாணவரான அரிஸ்டாக்ஸினஸ்-ம் ரித்மிக் எலிமன்ஸ், ஹார்மோனிக் எலிமன்ஸ் பற்றி கிரேக்க இசை கோட்பாடுகளில் கூறியுள்ளார்.

பண்டைய ரோமின் இசை

பண்டைய ரோம் எனப்படுவது மிடிடெறானியன், கடலை ஒட்டிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள், வட ஆப்பிரிக்கா நாடுகள் மற்றும் மேற்கத்திய ஆசியா நாடுகள் ஆகும். தொல்லியல் துறையால் லையர், லூட், திபியா, டியூபா, ஹார்ப் மற்றும் தாள இசைக்கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கிளான எழுதப்பட்ட விளக்கங்களும் கிடைத்துள்ளன. ரோமர்கள் (கி.பி.1 ரூ 2-ம் நூற்றாண்டு) கிரேக்கர்களின் இசை கலாச்சாரத்தை பயன்படுத்தி வந்துள்ளனர். எழுதப்பட்ட

பாடல்களை அடிக்கடி பாடியுள்ளனர். சீஸ்ரோ, குயின்டிலிபன் போன்ற எழுத்தாளர்கள் மக்கள் பன்படுத்தப்பட்ட இசையை கற்றுள்ளனர் என கூறியள்ளனர். திபியா (ஆலோஸ்) மற்றும் டியூபா போன்ற இசைக்கருவிகள் மதச் சடங்குகளிலும், ராணுவ நிகழ்ச்சிகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் கோர்னு மற்றும் பக்கினா போன்ற பு வடிவ ஹான் இசைக்கருவிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிரேக்க கட்டிடக்கலை, இசை மற்றும் தத்துவங்களை ரோம மக்கள் பயன்படுத்தியுள்ளனர். திறமையான இசை வல்லுநர்களைக் கொண்டு பெரிய குழுப்பாடல்கள், கூட்டு கருவி இசை, இசை நிகழ்ச்சிகள் மற்றும் இசை போட்டிகள் ரோமப் பேரரசால் 1-ம் மற்றும் 2-ம் நூற்றாண்டுகளில் நிகழ்த்தப்பட்டுள்ளன. ரோமப் பேரரசர்கள் இசை வல்லுநர்களை ஊக்குவித்து இசை வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றியுள்ளனர்.

பைபிளில் இசைச் செய்திகள்

பைபிளில் பழைய ஏற்பாட்டில் யாத்திரியாகமம் 15-ஆம் அதிகாரத்தில் மோசேயும் இஸ்ரவேல் மக்களும் இறைவனை புகழ்ந்து பாடினார்கள் எனவும் ஆரோனின் சகோதரி மிரியாமும் இறைவனை புகழ்ந்து பாடியதாக அறிய முடிகிறது. தாவீது இராஜா இறைவனை போற்றி சங்கீதம் 150 அதிகாரங்களில் பாடல்கள் புனைந்துள்ளதை காண முடிகிறதும், மேலும் சாலோமோன் ஞானி உன்னதப்பாட்டு 8 அதிகாரங்களில் இறைவனை போற்றி பாடல்கள் பாடியுள்ளதையும் அறிய முடிகிறது.

நியூம்ஸ் இசைக் குறியீடுகள்

நியூம்ஸ் இசைக்குறியீடுகள் எனப்படுபவை மியூசிக்கல் ஸ்டேவ் அல்லது ஸ்டாப்-ல் எழுதப்படாத ஆரம்ப கால இசைக்குறியீடுகள் ஆகும். இக்குறியீட்டுகளை மக்கள் இசை பயிற்சியளிப்போரின் உதவியுடன் பாடி துதி ஆராதனை செய்து வந்துள்ளனர். இதில் ஸ்டேவ் மற்றும் கிளப் முறை இல்லாதலால் மக்கள் தங்கள் குரலுக்கு உகந்த சுருதியில் பாடி வந்துள்ளனர். இக்குறியீடுகள் அச்சிடப்பட்ட எழுத்து வடிவில் அமைந்துள்ளன. இக்குறியீடுகள் அவற்றின் வடிவத்திற்கேற்ப குறிப்பு மதிப்புடன் பாடப்பட்டுள்ளன. இதற்கு பண்டைய இசை கோட்பாடுகள் உறுதுணையாக இருந்துள்ளன

கிரிகோரியன் சேன்ட்

கி;.பி. 6-ம் நூற்றாணடில் கத்தோலிக்க திருச்சபைகளின் போப் செயின்ட் கிரிகோரி (3 செப்டம்பர் 590 முதல் 12 மார்ச் 604 வரை) பணியாற்றினார். இவர் மேற்கத்திய செவ்விசை வளர்ச்சியின் துவக்க கால கட்டத்தில் முக்கிய பங்காற்றியவர். இவர் போப் ஆக பதவி வகித்தவுடன் கத்தோலிக்க ஆலயங்களில் ஆராதனை செய்வதற்கென இசை வல்லுநர்கள் மற்றும் பாடல் ஆசிரியர்களை கொண்;ட குழு அமைத்து இசை பாடல்களை இசை கூறுகள் மூலம் கோர்வையாக

நூல் வெளியிட்டுள்ளார். இதுவே கிரிகோரியன் சேன்ட் எனப்படுகிறது. இது குரலிசைக்கு மட்டுமே இசைக்குறியீடு கொண்ட இசைப்பெட்டகம். மேலும் இது மோனேபொனிக்காக எழுதப்பட்டவை. 6-ஆம் நூற்றாண்டில் துவங்கப்பட்ட இப்பணி 8-ஆம் மற்றும் 10-ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய நாடுகளிலுள்ள கத்தோலிக்க திருச்சபைகளில் முழுவதுமாக பரவி வழக்கில் வந்துவிட்டது. இவ்வாறு எழுதப்பட்ட மேற்கத்திய செவ்விசையின் இசை முறையினை கிரிகோரியன் சேன்ட் அல்லது பிளைன் சேன்ட் என உலகம் முழுவதும் வழங்கி வருகின்றனர். மேலும் இவர் பணியில் அமர்ந்தவுடன் 7-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஸ்கூல் ஆப் சிங்கர்ஸ் என்ற இசைப்பள்ளி அமைக்கப்பட்டது.

குயிடோ ஆப் அரிசோ இசைக்குறியீடுகள்

கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் காலகட்டங்களில் குயிடோ ஆப் அரிசோ (ஊச1991 - ஊச 1033) என்ற இத்தாலியின் இசை தியறி வல்லுநர் மற்றும் இசை ஆசிரியர் ஸ்டேவ் அல்லது ஸ்டாப் மாடர்ன் நொட்டேசன் முறையை முதன் முதலாக கண்டறிந்தவர். மேலும் மியுசிக்கல் ஸ்டாப்-ல் கிளப் முறையை அறிமுகப்படுத்தினார். இவரை போப் ஜாண் ஓஐஓ ரோமிற்கு அழைத்து கிரிகோரியன் சேன்டிற்கு இசை பங்காற்ற கேட்டுக் கொள்ளப்பட்டார். இவர் தான் கிரிகோரியன் சேன்டில் காணப்பட்ட பாடல்களை ஸ்டேவில் அமைத்தார். மேலும் இவர் இரு ஸ்வர கூறுகள் பாடும் முறையினையும், குயிடோனியன் ஹேன்ட் முறையையும், புதுபுது இசைக் குறியீடுகளையும், கிளப் முறையையும் கண்டறிந்து அறிமுகப்படுத்தினார். மேலும் தான் எழுதிய மைக்ரோலாகஸ் என்ற நூலில் பாடகர்களுக்கு செயல்முறை விளக்கங்களும், கவர் நோட்ஸ், இடைவெளி, ஸ்கேல்ஸ், மோட்ஸ், பாடல் இசையமைப்புகள் மற்றும் கற்பனை வள பாலிபொனி பற்றிய விளக்கங்களும் கூறியுள்ளார்.

லியோனின், பெரோடின் மற்றும் அனானிமஸ் ஐஏ

கி.பி. 11-ஆம் மற்றும் 12-ஆம் நூற்றாண்டுகளில் பிரான்சின் பாரீஸ் மாநகரில் வாழ்ந்த லியோனின் (ஊச1150 - ன 1201), பெரோடின் (ஊச 1200) ஆகிய இசை வல்லுநர்கள் மேற்கத்திய செவ்விசைக்கு வலுசேர்க்கும் விதமாக பாலிபொனிக் ஆர்கனம் இசை வடிவத்தை பயன்படுத்தினர். இவர்கள் இருவரும் பாரிசிலுள்ள நோட்ரி டாம் கத்தீட்ரல் ஆலயத்தில் இசை பணி செய்தும், இசையமைத்தும், புதிய இசை கோர்வையை உருவாக்கியும் பாலிபொனிக் ஆர்கனம் இசை வடிவத்தை மேம்படுத்தினர். மேலும் அனானிமஸ் ஐஏ (ஊச1270 - ஊச 1280) என்ற இசை வல்லுநரும் நோட்ரி டாம் கத்தீட்ரல் ஆலயத்தில் இசை பணி செய்தும் பாலிபொனிக் இசை வடிவத்தை மேம்படுத்தியும் உள்ளார். இவர் லியோனின் மற்றும் பெரோடின் ஆகியோர் ஆர்கனம் என்ற இசை தொகுப்பை நல்கிய சிறந்த இசை வல்லுநர்கள் என கூறியுள்ளார்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

டிரபோடர்ஸ், டிரவிரெஸ் மற்றும் மினிசிங்கர்ஸ்

டிரயோடர்ஸ், டிரவிரெஸ் எனப்படுவர்கள் பாடல்களை எழுதி இசையமைத்து பாடும் திறன் கொண்டவர்கள். இதில் பெண்களும் அடங்குவர். இது போன்றே மின்னிசிங்கர்ஸ் எனப்படுவர்கள் ஜெர்மன் நாட்டைச் சார்ந்த பாடல்களை எழுதி பாடும் திறன் கொண்டவர்கள். இவர்கள் பல்வேறு நாடுகளுக்கு சென்று தங்களுடைய திறன்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துபவர்கள். இவர்கள் கி.பி.11-ஆம் நூற்றாண்டு முதல் 14-ம் நூற்றாண்டு வரை பரவலாக காணப்பட்டனர். இவர்கள் மேற்கத்திய செவ்விசை வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியவர்கள்.

முடிவுரை

மேற்கத்திய செவ்விசையின் தோற்றமும், வளர்ச்சியும் என்ற இவ்வாய்வு கட்டுரையானது உலகில் எப்பகுதிகளில் மேற்கத்திய செவ்விசையானது முதலில் தோன்றி வளர்ச்சியடைந்துள்ளது என்பதை தொல்லியல் மற்றும் வரலாற்று ஆய்வுபூர்வமாக விளக்கும் விதமாக அமைந்துள்ளது. இவ்வாய்வு கட்டுரை இசைஆய்வு மாணவர்களுக்கும், இசை ஆர்வலர்களுக்கும் மேற்கத்திய செவ்விசையின் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றிய பார்வையை விரிவுபடுத்தும்.

துணை நூற்பட்டியல்;

1. A History of Western Music (International Student Edition)
2. The Oxford Companion to Music
3. Oxford Dictionary of Music
4. A Concise history of Western Music
5. History of Western Music